# நமது பிரதமர் அவர்கள் யுனைடெட் கிங்டம் பிரதமரை சந்தித்தார் (ஜூலை 24, 2025)

ஜூலை 24, 2025

23-24 ஜூலை 2025 தேதிகளில் யுனைடெட் கிங்டம் பயணத்தின் போது, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று யுனைடெட் கிங்டமின் மாண்புமிகு பிரதமர் சர் கீர் ஸ்டார்மர் அவர்களை சந்தித்தார்.  UK பிரதமர் தங்கியிருக்கும் பக்கிங்கம்ஷையரில் உள்ள செக்கர்ஸிற்கு வந்த உடன், பிரதமர் ஸ்டார்மர் அவர்கள் நமது பிரதமரை வரவேற்றார்.  இரு தலைவர்களும் தனிப்பட்ட சந்திப்பு மற்றும் பிரதிநிதிகள் அளவிலான பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

2. இரு நாடுகளிலும் இருதரப்பு வர்த்தகம், முதலீடு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை கணிசமாக மேம்படுத்தும் அதே வேளையில், விரிவான உத்திசார் கூட்டாண்மையை ஒரு புதிய நிலைக்கு உயர்த்தும் வரலாற்றுமிக்க இந்தியா-UK விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (CETA)-யில் கையெழுத்திடப்பட்டதை இரண்டு பிரதமர்களும் வரவேற்றனர்.  இரு தரப்பினரும் இரட்டை பங்களிப்பு மாநாடு குறித்த பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டுள்ளனர், இது CETA உடன் நடைமுறைக்கு வரும் மற்றும் போட்டித்தன்மையை ஊக்குவிப்பதன் மூலம் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான வணிகச் செலவைக் குறைப்பதன் மூலம் இரு நாடுகளிலும் உள்ள தொழில்முறையாளர்கள் மற்றும் சேவைத் துறையை எளிதாக்கும்.  கேப்பிட்டல் மார்க்கெட்கள் மற்றும் நிதி சேவைகள் துறைகளில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பைக் குறிப்பிட்ட பிரதமர் மோடி, குஜராத்தில் கிஃப்ட் சிட்டி, இந்தியாவின் முதல் சர்வதேச நிதி சேவை மையம் மற்றும் இங்கிலாந்தின் துடிப்பான நிதி சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு இடையிலான அதிக தொடர்புகளை ஊக்குவிக்க இரு தரப்பினரும் மேலும் பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

3. இரு தலைவர்களும் இருதரப்பு உறவின் முழு விஷயங்களையும் மதிப்பாய்வு செய்தனர் மற்றும் இந்தியா-UK விஷன் 2035-ஐ ஏற்றுக்கொண்டனர். விஷன் 2035 ஆவணம் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சி, தொழில்நுட்பம், கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மற்றும் கல்வி, இராணுவம் மற்றும் பாதுகாப்பு, காலநிலை நடவடிக்கை, சுகாதாரம் மற்றும் மக்கள்-இடையேயான உறவுகளின் முக்கிய துறைகளில் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு உறவை வழிநடத்துவதன் மூலம் விரிவான உத்திசார் கூட்டாண்மையில் அதிக லட்சியத்தையும் புதுப்பிக்கப்பட்ட வேகத்தையும் உருவாக்கும்.

4. இரு நாடுகளும் உலக சந்தையில் வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்ய இணை-வடிவமைப்பு, இணை-மேம்பாடு மற்றும் பாதுகாப்பு தயாரிப்புகளின் இணை-உற்பத்தியில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான பாதுகாப்பு தொழில்துறை சாலை வரைபடத்தை இறுதிப்படுத்துவதையும் இரு தலைவர்களும் வரவேற்றனர். இரு நாடுகளின் ஆயுதப் படைகளின் வழக்கமான ஈடுபாட்டை வரவேற்று, இராணுவம் மற்றும் பாதுகாப்பு கூட்டாண்மையை ஆழப்படுத்துவதில் அவர்கள் திருப்தியை வெளிப்படுத்தினர்.

5. புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மேற்கொள்ளப்படும் ஒத்துழைப்பில் இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்தனர் மற்றும் தொலைத்தொடர்பு, முக்கியமான தாதுக்கள், AI, பயோடெக்னாலஜி மற்றும் சுகாதார தொழில்நுட்பம், செமிகண்டக்டர்கள், மேம்பட்ட பொருட்கள் மற்றும் குவாண்டம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு முன்முயற்சியை (TSI) விரைவுபடுத்த அழைப்பு விடுத்தனர். TSI இன்று ஒரு வருடத்தை நிறைவு செய்துள்ளது.

6. புதிய கல்விக் கொள்கை (NEP) -யின்கீழ் இந்தியாவில் கல்லூரி வளாகங்களைத் திறக்க ஆறு இங்கிலாந்து பல்கலைக்கழகங்களுடன், கல்வித் துறையில் இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையே வளர்ந்து வரும்

கூட்டாண்மையை இரண்டு பிரதமர்களும் வரவேற்றனர். 16 ஜூன் 2025 அன்று குருகிராமில் வளாகத்தை திறந்த சவுதாம்ப்டன் பல்கலைக்கழகம், NEP-யின்கீழ் இந்தியாவில் அதன் வளாகத்தை திறந்த முதல் வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஆகும்.

7. கல்வி, கலை, இலக்கியம், மருந்து, அறிவியல், விளையாட்டு, வணிகம் மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் இங்கிலாந்து வாழ் இந்திய வம்சாவளியினரின் மதிப்புமிக்க பங்களிப்பை இரு தரப்பினரும் பாராட்டினர். இந்த வாழ்க்கைப் பாலம் இந்தியா-இங்கிலாந்து உறவுகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டின் முக்கிய தூண் என்று அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

8. பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து இந்திய மக்களுக்கு வலுவான ஆதரவு மற்றும் ஒற்றுமைக்காக பிரதமர் ஸ்டார்மர் அவர்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தை வலுப்படுத்த இரு தலைவர்களும் உறுதிபூண்டுள்ளனர். தீவிரவாதம் மற்றும் தீவிரமயமாக்கல் இரு சமூகங்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்பதைக் குறிப்பிட்ட அதேவேளை, அச்சுறுத்தலை சமாளிக்க இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த அவர்கள் ஒப்புக் கொண்டனர். பொருளாதார குற்றவாளிகளை சட்டத்திற்கு முன்பு கொண்டுவருவதற்காக இங்கிலாந்தின் ஒத்துழைப்பை பிரதமர் மோடி கோரியுள்ளார்.

9. இந்தோ-பசிபிக், மேற்கு ஆசியா மற்றும் ரஷ்யா-உக்ரைன் மோதல் ஆகியவற்றில் முன்னேற்றங்கள் உட்பட பரஸ்பர நலன் சார்ந்த உலகளாவிய மற்றும் பிராந்திய பிரச்சனைகள் குறித்து இரு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறினர்.

10. பிரதமர் தனக்கு வழங்கிய விருந்தோம்பலுக்காக பிரதமர் ஸ்டார்மர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார் மற்றும் விரைவில் இந்தியா வருமாறு அவரை அழைத்தார்.

11. இந்த பயணத்தின் போது பின்வரும் ஆவணங்கள் இரண்டு தரப்பினரால்
கையொப்பமிடப்பட்டன/ஏற்றுக்கொள்ளப்பட்டன:

- விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் [CETA]

- இந்தியா-UK விஷன் 2035 [Link]

- பாதுகாப்பு தொழில்துறை சாலை வரைபடம்

- தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு முன்முயற்சி பற்றிய அறிக்கை [Link]

- மத்திய புலனாய்வு பியூரோ, இந்தியா மற்றும் UK-யின் தேசிய குற்ற நிறுவனத்திற்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

லண்டன்

ஜூலை 24, 2025